சிறப்பு சார்பு நீதிமன்றம், (MACT) கிருஷ்ணகிரி
**M.C.O.P No. 1420/2025, Date: 09.07.2026**

The Oaths Act 1969, Act No.44/1969ன் விதிமுறைகளின் படி 09.07.2026 நாளாகிய இன்று Tmt.M.Jayanthi,M.A.,M.L., சிறப்பு சார்பு நீதிபதி (MACT) அவர்கள் முன்னிலையில் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : ஹரிஸ்குமார் | **வயது** | : |
| **தந்தை பெயர்** | : | **மாவட்டம்** | : |
| **வேலை** | : | **கிராமம்** | : |
| **அலைபேசி எண்.** | : | | |

**ம.சா.1**

முதல் விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)

நான் மனுவின் மனுதாரர். பிரமாண வாக்குமூலம் எனது தரப்பில் **(e-filling)** மூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை என்று உறுதியளிக்கிறேன். மனுப்படி உத்தரவிடவேண்டுகிறேன். **ம.சா.ஆ.3–** மற்றும் **ம.சா.ஆ.4–**மருத்துவ விடுவிப்பு சான்றுகள் அசல், **ம.சா.ஆ.10** மருத்துவ பில்கள் ரூ.55,275/– அசல் ஆவணங்களை (ஆட்சேபனையுடன்) முன்னிலைப்படுத்தியுள்ளேன்.

குறுக்கு விசாரணை :– (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

விபத்து திருப்பத்தூர் –ஊத்தங்கரை மாநில நெடுஞ்சாலையில் வடிவேலன் பங்க் அருகே ஏற்பட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை இளையரசன் என்பவர் ஓட்டினார். அவருக்கு பின்னால் நானும், எனக்கு பின்னால் சதிஷ் என்பவரும் பயணம் செய்தோம். இளையரசனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை

என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனம் சந்திப்பு சாலையில் எங்களுக்கு இடதுபுறமிருந்து வலதுபுறமாக வந்தபோது விபத்து ஏற்பட்டதா என்றால் ஆமாம். இளையரசன் திடீரென சாலையின் மத்தியில் நிறுத்திவிட்டார் என்றாலும், அதனால் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து குறித்து என் அப்பா புகார் அளித்தார். அவர் விபத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். இளையரசனின் கவனக்குறைவை மறைத்து தவறாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனையிலும், பிறகு மேல்சிகிச்சை அருண் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றேன். விபத்தில் எனக்கு இடது காலில் இரண்டு எழும்பு முறிவு ஏற்பட்டது. காலில் அறுவை சிகிச்சை செய்து ராடு பொருத்தப்பட்டுள்ளது தற்போது வரை அகற்றப்படவில்லை. விபத்தின்போது நான் 3ம் ஆண்டு கல்லூரி படிப்பு படித்து வந்தேன். விபத்தினால் எனக்கு படிப்பு தடைபடவில்லை என்றால் சரிதான். மருத்துவ பில்கள் குறித்து உரிய மருத்துவமனையில் வந்து சாட்சியம் அளித்தால்தான் எனக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ள அனைத்து செலவினங்கள் நஷ்டஈடு பெற வேண்டி மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தொழில், வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உடல்ரீதியாக சொல்லியுள்ள குறைபாடுகளுக்கு மருத்துவ ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எவ்வித நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ, செயல்திறன் பாதிப்போ இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10ல் வரிசை எண்.2ல் நரேஷ்குமார் என உள்ளதால் எனக்கு அது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்து தானாகவே விபத்து ஏற்படுத்தியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல

என்றால் சரியல்ல, 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

M JAYANTHI

Digitally signed by M JAYANTHI

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்(MACT),
கிருஷ்ணகிரி.